**01.08.2025**

**அ.வ.எண். 83/2020**

**வா.சா.1 - அன்பழகன், த/பெ. மாரப்பன்**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 01.08.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் SMS HOLLOW BLOCKS நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உரிமையளார் என்பதை காட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பஞ்சாயத்து லைசன்ஸ் வாங்கியுள்ளேன், இந்திய வணிக வரித்துறையிடம் GST சான்றிதழ் பெற்றுள்ளேன், மற்றும் தமிழ்நாடு அரசின் வணிக வரித்துறையிடம் GST சான்றிதழ் பெற்றுள்ளேன், உதயம் ஆதார் பதிவு சான்றிதழ் பெற்றுள்ளேன். பஞ்சாயத்து லைசன்ஸை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தொழில் வரி போட்டு கொடுத்துள்ளனர், உரிமம் கொடுக்கவில்லை.

2. வழக்கு சொத்து சூலூர் வட்டம், கலங்கல் கிராமத்தில் உள்ளது. க.ச.எண்.295 காலையில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட இடத்தில் நான் தொழில் செய்து வருகிறேன் என்றால் ஆமாம். அதில் சைட் எண்.688, 689, 690 நிலம் என்னுடையது. மேற்படி மூன்று சைட்களும் வீட்டு மனைதான். அது காவேரி நகர் விரிவுபகுதியில் உள்ளது. மூன்று சைட்களும் தென்வடல் கலங்கல் ரோட்டிற்கு கிழபுறமாக உள்ளது. மூன்று சைட்களுக்கும் வடபுறம் கிழமேல் தடம் 23 அடியில் உள்ளது என்றால் சரிதான். கிழமேல் தடத்திற்கு வடபுறமாக 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3. 1, 2 பிரதிவாதிகளின் சைட் எண்.682, 685, 686 என்றால் சரிதான். மேற்படி என்னுடைய சைட்டுகளின் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வரைபடம் என்னுடைய சைட்டிற்குரியது. **காவேரி நகர் விரிவு சர்வே எண்.295 ல் உள்ள வீட்டு மனைக்கான வரைபடம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.சா.ஆ.1 ஆவணத்தில் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 687, 688,

689, 690 சைட்டுகள் என்னுடையது. எனது சைட்டிற்கு வடபுறமாக உள்ள கிழமேல் தடத்திற்கு வடபுறம் உள்ள சைட் எண் 682, 686 நிலம் பிரதிவாதியினுடையது. சைட் எண்.687 ல் நான் வீடு கட்டியுள்ளேன்.

4. சைட்.688, 689, 690 நிலங்களில் SMS HOLLOW BLOCKS நிறுவனம் இயங்கி வருகிறது. அதில் HOLLOW BLOCKS செய்வதற்கான மூலப்பொருட்களான M-Sand, ஜல்லி, சிமெண்ட் ஆகிய பொருட்களை எப்போது இருப்பு வைத்திருப்பேன். மேற்படி சைட்டில் மெஷின் வைத்து HOLLOW BLOCKS தயார் செய்வேன். 24 மணி நேரமும் நிறுவனம் செயல்படுமா என்றால் காலை 6 மணி முதல் - மதியம் 1 மணி வரை செயல்படும். HOLLOW BLOCKS நிறுவனத்தின் கேட் ஆனது சைட் ஆனது 688 ல் உள்ளது. அது சுமார் 20 அடி இருக்கும். மேற்படி கேட் நேராக பிரதிவாதியின் வாசலை பார்த்து இருக்கும் என்றால் சற்று தள்ளி இருக்கும்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct<br><br>Sd./M.Santhosham<br>District Munsif, Sulur |